# மாதர் போதினி

No. 282 ஜூலை 1921 No. 7


## MIRACLES OF FAITH IN CHINA

## சீனாவில் விசுவாசத்தால் நடந்த அற்புதங்கள்

(தொடர்ச்சி)

இதற்குப்பின் சீனாவில் பத்து வருஷம் வேலை செய்தேன். வருஷந்தோறும் ஐந்தாறு வகுப்புகள் நடத்திவந்தேன். யோ. 14[13,14] விலுள்ள வாக்குத்தத்தங்களை உரித்தாக்கிக்கொண்டு விசுவாசமுள்ள ஜெபத்திற்குப் பலனாக தேவன் கிரியை நடப்பிப்பாரென்று நம்பி எப்போதும் நடந்துகொண்டேன். இக்காலங்களில் நான் நடத்தின வகுப்புகள் எல்லாவற்றிலும் குணப்படாமற்போன ஒருவரும் கிடையாது.

நான் வேலைசெய்த ஒரு கிராமத்தில், சீனபாஷை பேசத்தெரிந்த ஒரு வெள்ளைக்கார அம்மாளுண்டாமே என்ற ஆச்சரியத்தோடு என்னைப் பார்க்க ஓர் பெண் வந்தாள். நான் ஜெபம் கற்றுக்கொடுப்பதைக் கேட்டுக்கொண்டிருந்து பின் தானும் அந்த ஜெபத்தைக் கற்றுக்கொள்ளலாமாவென்று கேட்டாள். 'உனக்கு ஒரு இரட்சகர் வேண்டுமா? அவரை ஏற்றுக்கொள்ள உனக்கு விருப்பமா?' என்று கேட்டேன். ஆம், விருப்பம்தானென்று சொல்லி என் வகுப்பில் சேர்ந்துகொண்டாள். அன்று மாலையிலும் என் வகுப்பில் வந்து உட்கார்ந்தாள். முழங்காற்படியிட்டு ஜெபிப்போமாக என்று சொன்னபோது, இந்தப் பெண்ணும் முழங்காற்படியிட்டு, தேம்பித் தேம்பி அழுது தன் பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்புக்காகக் கெஞ்சி, கர்த்தர் தன் இருதயத்தை சுத்திகரித்து இரட்சிக்கக் கெஞ்சினாள்.

அன்று சாயங்காலம் யோ. 14[13]-[14] விலுள்ள வாக்குத்தத்தமான சுதந்தரத்தைப்பற்றிச் சொல்லி, யாராவது ஜெபிக்கக் கேட்கவேண்டிய விஷயமுண்டாவென்று கேட்டேன். உடனே Mrs. Wang என்ற இந்தப் பெண் எழுந்து நின்று, 'கர்த்தராகிய இயேசு என் புருஷனை இரட்சிப்பாரா?' என்றாள். அவர் சர்வவல்லமையுள்ள

தேவன் என்றேன். அதற்கு அவள் 'என் புருஷன் எப்படிப்பட்டவ னென்று உங்களுக்குத் தெரியாது. அவன் ஓர் பலத்த குடிகாரன். நான் அவனைக் கலியாணஞ் செய்துகொண்டதுமுதல் இதுவரை அவன் குடியாமல் வீட்டுக்கு வந்த நாள் கிடையாது. எனக்கு இப் போது வயது 45. நான் என் மாமி வீட்டுக்குப் போனபோது 14 வய துக்குக் கீழ்ப்பட்டவள். என் புருஷன் குடியில் பணத்தை அழிப்ப தால் எனக்கும் என் பிள்ளைகளுக்கும் மாரிகாலத்தில் போதுமான கம்பளி உடுப்பு கிடையாது. எங்களுக்கு சாப்பாட்டுக்கும் அதிக கஷ்டமாயிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு மனுஷனைக்கூட இயேசு வானவர் இரட்சிப்பாரா?' என்றாள்.

'ஆம், அவர் இழந்துபோனதைத்தேடவும் இரட்சிக்கவுமே வந்தார்' என்றேன். பின் இதை நீ விசுவாசிக்கிறாயாவென்று கேட்டபோது, அவள் கண்ணீர்விட்டழுது, 'ஆம், விசுவாசிக்கிறேன். ஆனால் நான் படியாதவள், எனக்கு ஜெபிக்கத் தெரியாது, நீங்கள் எனக்காக ஜெபிப்பீர்களா?' என்றாள். இதைப்பற்றி நான் வகுப்பாருக்குச் சொல்லி, ஒவ்வொருவரும் தினந்தோறும் இந்த மனிதன் குணப் படும்வரை ஜெபிப்பதாகத் தீர்மானித்தோம். இவ்விதம் இரண்டு வாரம் ஜெபித்தபின் மற்ற இடங்களிலுள்ள வேலைக்கு நான் திரும் பிப்போக நேரிட்டது.

ஒரு வருஷத்துக்குப் பின் நான் திரும்பி அந்த இடத்துக்கு வந்த போது Mrs. Wang என்ற அந்தப் பெண் முதலில் ஓடிவந்து என் கழுத்தைக் கட்டிக்கொண்டு தன் புருஷன் குணப்பட்டதைப் பின் வருமாறு சொன்னாள்:

'ஒரு வருஷத்திற்குமுன், என் இரட்சகரைப்பற்றி உங்கள் வகுப்பில் கற்றுக்கொண்டபின், நான் வீட்டுக்குப்போய் கிறிஸ் தவளாகிவிட்டேனென்று என் புருஷனுக்குச் சொன்னேன். அவர் கோபங்கொண்டு மூர்க்கமாய் என்னை அடித்து, நான் ஒருமாதகாலம் படுக்கைவிட்டு எழும்பக்கூடாமல் இருந்தேன். அக்காலத்தில் தினந்தோறும் என்னைத் திட்டி சாபம்போட்டுக் கொண்டே வந்தார். என் சிறு பையன்தான் எனக்காக சாப்பாடு சமைத்து என்னைப் பராமரித்தான். எனக்கு சுகமான பின்பும் ஆறுமாதங்களாய் துன்பப்படுத்தி வந்தார். அக்காலங்களிலெல்லாம் அவருக்காக ஓயாமல் ஜெபித்துக்கொண்டே வந்தேன். அறியாமல் அவர் அப்படிச் செய்ததால் அவரை மன்னிக்கும்படி தேவனிடத்தில் கேட்டேன்.

இப்படியிருக்கையில் ஒருநாள் அவர் பக்கத்திலிருந்த கடையி லிருந்து குடிவெறியின்றி பொழுதோடே வீட்டுக்கு வந்தார். நான்

அவரை அறிந்ததுமுதல் குடிவெறியின்றி அவர் வீடு வந்தது அன்று தான். நான் அதிசயத்தோடே, 'உங்களுக்கு என்ன ?' என்றேன்.

'அது எனக்குத் தெரியாமல் உன்னையே கேட்க வந்தேன். எனக்குப் பைத்தியம்பிடித்துவிட்டதோ ?' என்றார்.

'ஏன் ? என்ன நேரிட்டது ?' என்றேன். 'பெரிய காரியம் நடந்தது. இன்று கடையில் என் வேலையை முடித்துவிட்டு சாராயக்கடைக்குப்போய் வாசலில் காலெடுத்து வைக்குமுன் எனக்குள்ளிருந்து "உள்ளே போகாதே, வீட்டுக்குப் போ ; உள்ளேபோகாதே, வீட்டுக்குப் போ" என்ற உரத்தசத்தங் கேட்டது. நான் திடுக்கிட்டதால் என் பை தவறி விழுந்து காசெல்லாம் தரையில் சிதறிவிட்டன. யாரோ பையன்கள் கேலிபண்ணுகிறார்களென்று எண்ணி அமர்ந்திருக்கப் பார்த்தேன். தெருவுக்குப் போய் முற்றமெல்லாம் யாரும் பையன்களுண்டோவென்று தேடிப் பார்த்தேன். சுற்றுமுற்றும் தேடியும் யாருமில்லை. சாராயக்கடையில் அநேகரிருந்தார்கள். அவர்கள் பேசிக்கொண்டதெல்லாம் கேட்டது. மறுபடியும் அங்குமிங்கும் சுற்றிப்பார்த்தேன். நான் மிகவும் கலங்கி, நான் ஓர் மூடனென்றெண்ணினேன். மறுபடியும் வாசலில் கால்வைக்கப் போனபோது அதே சத்தம் முன்னிலும் உரத்ததாயும் தெளிவாயும் "உள்ளே போகாதே, வீட்டுக்குப்போ ; உள்ளே போகாதே, வீட்டுக்குப் போ" என்று கேட்டது. நான் அதிகமாய் பயப்படுகிறேன். எனக்குப் பைத்தியம் பிடிக்கப்போகிறதோ, பிடித்துவிட்டதோ ? எனக்கு என்னவென்று நினைக்கிறாய் ?' என்றார்.

'ஓ, அதென்னவென்று எனக்குத் தெரியும். அது கர்த்தராகிய இயேசுதான். அவர் பரமபிதாவின் குமாரன். உன்னை இரட்சிக்க அவர் சிலுவையில் மரித்தார். நீ சாராயக்கடைக்குள் போய் குடித்து கெட்டுப்போவது அவருக்குப் பிரியமில்லை. உன்னிடத்தில் பேசினது அவர் பரிசுத்தாவியின் சப்தமே' என்றேன். அவர் அதிசயத்தோடு, இயேசுவே அவருடைய இரட்சகரென்று நான் திரும்பத் திரும்பச் சொன்னதை அதிக கவனமாய்க் கேட்டார்.

கடைசியில், 'நீ கற்றிருப்பது சாத்தானுடைய கொள்கையோ ?' என்றார்.

'சாத்தானுடையதல்ல, இயேசுவினுடையது' என்றேன்.

'அப்படியானால் இதைப்பற்றி முன்னமே ஏன் சொல்லவில்லை ? முன் தெரியாமல் செய்தேன். எனக்கு விளங்கவில்லை. என் ஜீவகாலமெல்லாம் இனி ஒருபோதும் குடிக்கமாட்டேன்' என்றார்..

அப்படியே அவர் ஒருபோதும் குடிக்கவில்லை. அவர் மெய்யாய்க் குணப்பட்டார். அவர் சபையில் சேர்ந்து, தன் குடும்ப

முழுவதும் சபையில் சேர எவி, தன் பிள்ளைகளை கிறிஸ்தவ பாடசாலைக்கு அனுப்பினார். அவர் மனைவி அவர் குணப்படுதலுக்குப் பின் நாலு வருஷம் உயிரோடிருந்து, இயேசுவிலும் அவர் இரட்சிக்கும் வல்லமையிலும் களிகூர்ந்து ஆசீர்வதிக்கப்பட்ட கிறிஸ்தவளாய் மரித்தாள். இந்தப் புஸ்தகம் எழுதப்படும் காலத்திலும் அவள் புருஷன் உயிரோடிருக்கிறார்.

## THE WAY OF LIFE

## ஜீவ வழி

உலகத்திலே அநேக வழிகளுண்டு. வழிகளென்றால் மார்க்கமென்றர்த்தமாம். சர்வ மார்க்கங்களும் ஒரே இடத்திற்கு குறிக்கப்கப்பட்டதென லகுவாகப் புகல்வர் அநேகர். யாவரேனும் ஒருவர் நின்ற இடத்தில் நின்றபடியே, எல்லா மார்க்கங்களும் ஒரே இடத்தில்தான் முடியுமென்பது அடாது. நம்மில் அநேகர், கொஞ்சநேர பயணமாகிய ஓர் ஊருக்கு பற்பல கோணமார்க்கமாக எகித் திரும்புவதை முன்னிட்டோ, எல்லா மார்க்கங்களும் ஓரிடத்திற்கென்றியம்புவது? சில சமயம் நாகப்பட்டணத்திற்கென்று நான்கு வழிகளுண்டாயிருந்தால், நாமதேயமும் நான்காயிராமல், நான்கு மார்க்கத்திற்கும் 'நாகப்பட்டணத்திற்கு' என்று போர்ட் (Board) போடப்பட்டிருக்குமென்பது திண்ணம். இந்த மார்க்கங்களிலே நடக்கும் எந்தப் பிரயாணிகளைக் கேட்டாலும், நாகப்பட்டணம் போகிறோமென்பார்களேயொழிய வேறே ஒரு நாமத்தையும் உச்சரிக்க இடமிராது. அப்படியே எந்நகரிலும் நன்னகரென விளங்கும் பொன்னகரொன்றுண்டென யாமறிவோம். இந்நகரமோ முடிவிலாததும், துன்பமுந் துக்கமும் சேராததும், பசியுந் தாகமும் உண்டாகாததும், அற்பத்தில் மறைந்துபோகுஞ் சிற்றின்பத்தையல்ல, நித்திய பேரின்பத்தைத் தரக்கூடியதெனவும் நமக்குத் தெரியவே தெரியும். ஆனாலும், இந்நகரத்தை ஒருவருங் காணக்கூடாமல் எல்லோருங் கெட்டுப்போக வேண்டியவர்களாயிருக்குஞ் சமயம் அதாவது உலகத்தாரெல்லாரும், தங்கள் தங்கள் துர்ச்சிந்தனைகளினாலும், வார்த்தைகளினாலும், கிரியைகளினாலும் தங்களை உண்டாக்கினவரைவிட்டு விலகி தங்கள் சொந்த வழிகளிலே நடந்து வீணிலே அழிந்துபோகவேண்டியவர்களாயிருந்த அச்சமயத்திலே, நன்மைச்சொரூபியாகிய பொன்னாட்டரசன், தமக்குள் பொங்கி வழிந்த அன்பினால், தமது செல்வத்தை செல்வமென்றும் பாராமல்

செலவழித்து மண்ணாட்டார் யாவரும் பொன்னாட்டை யடையும் பொருட்டு, கோணலான வழியையல்ல, ஆனால் நேர்வழியை உண்டு பண்ணுவித்திருக்கிறார். இதுவே கிறிஸ்து யேசுவெனுந் திருவழி: பொன்னாட்டுக்குப் போவார் எவரும் போற்றிப் பேசும் வழி: மண்ணாட்டாருக்கென்றமைக்கப்பட்ட மாறாத கருணைவழி. இவ் வழியைத் தப்பினால் பொன்னாட்டுக்கு வேறே எது வழி? மண்ணாடாகிய இவ்வுலகத்திலே எத்திசை எக்கோணத்திலிருந்தென்றாலுஞ் சரி, பொன்னாட்டுக்குப் பிரயாணஞ்செய்பவர் பகரும் வழி கிறிஸ்து யேசுவெனும் ஒரே ஒரு வழியையல்லால் வேறெவ்வழியைப் புகல்வர்? அந்தரத்தோர் பாடிய வழியிது, அருள் வழி. நந்தர்கள் பணிந்தேற்றிய வழியிது, நல்வழி. பந்தபாசத்தை யறுத்து வீடு சேர்ப்பதற்கு, வந்த வழி. சிந்தைக்கினிய வழியிது, மேலான வழி. அகத்தையுடையார் அடைவதற்கு, அரிதான வழி. எந்த நாளிலும் அந்தகாரப்படா வழி, அற்புத வழி. பாவத்தையறுத்துச் சாபத்தைத் தொலைத்த வழி, ஆபத்தற்ற வழி. கள்ளருங் கொள்ளைக்காரரும், செல்லொண்ணா வழி. சத்தியந்தரும் வழியிது, நித்தியவழி. தெளிந்த வழியிது, தேனிலும் இனிய வழி. தூசிலா வழியிது, மாதுர்ய வழி. சிற்றின்பஞ் சேராவழி யிது, சிறந்த வழி. உள்ளத்தில் உண்மையை அமைக்கும் வழியிது, ஒரே வழி. பல கிளைவழி இணைக்கப்படாமல், கோணலும் வளைவுமற்று, பள்ளமுமேடுமற்று, கல்லுமுள் காடுமற்று, தானே தானாக நிற்கும் வழியிது, நேர்வழி. நித்திய ஜீவனைத்தரும் வழியிதுவே, தேவவழி. தங்கள் தங்கள் இச்சைக்கேற்றபடி நடக்க, மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு. அதின் முடிவோ மரண வழிகள் (நீதி. 14: 12). ஆண்டவராகிய கர்த்தரால் மாத்திரம் மரணத்திற்கு நீங்கும் வழிகளுண்டு (சங். 68: 20). வழியுஞ் சத்தியமும் ஜீவனுமாயுள்ள கிறிஸ்து யேசுவினாலேயல்லாமல் ஒருவரும் தேவனைத் தரிசிக்கலாகாது (யோவா. 14: 6). கிறிஸ்து யேசுவெனும் ஜீவவழியைக் கண்டவர்களோ, பொன்னுலகாதிபதியைக் கண்டவர்கள்தான் (யோவா. 14: 9). ஆனாலும் அநேகர் கண்டும் காணாதவர்களாய், கேட்டும் கேளாதவர்களாய் இருப்பார்கள் (ஏசா. 6: 9). அவர்கள் இந்நாள்மட்டும் மனம் நொறுங்குண்டதுமில்லை, அவர்கள் பயப்படுகிறதுமில்லை (எரே. 44: 10). அவர்களுக்கு மாறுதல்கள் நேரிடாததினால் தேவனுக்கு பயப்படாமற் போகிறார்கள் (சங். 55: 19). அவர்கள் இருதயம் அவரிடத்தில் நிலைவரப்படவில்லை (சங். 78: 39). கர்த்தருடைய வசனம் அவர்களுக்கு நிந்தையாயிருக்கிறது. அதின்மேல் அவர்களுக்கு விருப்பமில்லை (எரே. 6: 10). வெறித்தவனைப்போல அலைந்து தடுமாடு

கிறார்கள். அவர்களுடைய ஞானமெல்லாம் முழுகிப்போகிறது (சங். 107 : 27). மித்திரியே! நாம் இந்தக்கூட்டத்திலே ஒருபோதுஞ் சேரப்படாது. ஏனென்றால் அறியாமற் செய்தவர்கள் அடிக்குப் பாத்திரராயிருந்தபோதிலும், சில அடிகள்தான் அடிக்கப்படும். அறிந்தும் அறியாதார்போல் நடந்துகொள்பவருக்கோ அநேக அடிகள் அடிக்கப்படும் (லூக். 12 : 47). தேவன் நீதியுள்ள நியாயாதிபதி, அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன் (சங். 7 : 11). நம்முடைய தேவன் வருவார், மௌனமாயிரார் (சங். 50 : 3). கொஞ்சகாலத்திலே (அதாவது நினையாத நேரத்திலே) அவருடைய கோபம் பற்றியெரியும். அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள் (சங். 2 : 12). ஆதலால், உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள் எனக் கனிவாய் விளம்பின கடவுளை நமது மெய்யான விசுவாசக்கண்ணினால் தேடி ஜீவவழியிலே ஓடி ஜெபமெனுங் கரங்களால் அவரைப் பிடித்துக்கொள்ளப் போதுமான பலத்தையும் நல்ல உற்சாகத்தையுந் தந்தாதரித்தருள நமது மீட்பர் கிறிஸ்து யேசுவின் மூலமாக ஜீவனுள்ள தேவனை மன்றாடுவோமாக.

Y. M. Solomon.

## TEMPERANCE

## மதுவிலக்கின் மகிமையான 9 கட்டளைகள்

1. மது அருந்தினால் ரோட்டில் தள்ளாடித் தள்ளாடி நடந்து வரும்படி நேரிடும். உன்னைப் பார்த்து அநேகர் நகைப்பார்கள், அநேகர் பரிதபிப்பார்கள். ஆகையால் மதுவை நீ விரும்பாதே.

2. மது அருந்தினால் நீ தரித்திரனாவாய். உன் வீட்டில் சாப்பாடு செய்யப் போதுமான பணமிராது. குளிருக்குப் போர்த்திக்கொள்ள போர்வையிராது. ஆகையால் மதுவை நீ விரும்பாதே.

3. மது அருந்தினால் உன் ஆயுசு நாள் சுருங்கி, உன் மரண நாள் கிட்டிவிடும். மயக்க வஸ்துக்களால் நீ மதிமயங்கி அலைவாய். ஆகையால் மதுவை நீ விரும்பாதே.

4. மது அருந்தினால் வாதுகள், சண்டைகள் செய்து, தூஷணங்கள் பேசி, கோர்ட்டுக்கும் கச்சேரிக்கும் அலைந்து, கொடிய ஜெயிலில் அடைபடுவாய். ஆகையால் மதுவை நீ விரும்பாதே.

5. மது அருந்தினுல் நீ உன் மக்களுக்குப் பகைஞனும் உன் மனைவிக்குத் துரோகியுமாவாய். அவர்கள் உன்னைத் தங்கள் மனதில் அவமதிப்பார்கள். ஆகையால் மதுவை நீ விரும்பாதே.

6. மது அருந்தினுல் உன் வேலை ஸ்தலத்தில் உடன் ஊழியரால் இகழ்ச்சியாய் எண்ணப்படுவாய். உன்னில் காணப்படும் குறைகள் குடிவெறியால் உண்டானது என்று சொல்வார்கள். ஆகையால் மதுவை நீ விரும்பாதே.

7. மது அருந்தினுல் நீ கடன்காரனுவாய்; கடன் கொடுத்தவனைக் கண்டால் நீ பயந்து ஒளித்துக்கொள்ள நேரிடும். அவனுக்கு நீ அடிமையாவாய். ஆகையால் மதுவை நீ விரும்பாதே.

8. மது அருந்தினுல் மண்டைகள் உடைந்து, மறதிகள் நேர்ந்து, மடியிலுள்ள காசுகள் மறைந்து, மனக்கிலேச மடைந்து மயங்குவாய். ஆகையால் மதுவை நீ விரும்பாதே.

9. மது அருந்தினுல் மங்கா குடிகாரனெனப் பேரெடுத்து, குடும்பத்திற்கு சிறுமையுண்டாக்குவாய். வீட்டிலும், நாட்டிலும், வெளியிலும், ஊரிலும் குடிகாரன் என அழைக்கப்படுவாய். ஆகையால் மதுவை நீ விரும்பாதே.

## DRINK, THE VENOMOUS SERPENT

## குடிவெறியென்னும் வலுசர்ப்பம்

ஒரு தேசத்தில் ஒரு ராஜகுமாரன் இருந்தான். அவன் தன் அருமையான சிநேகிதனைத் தேடிக்கொண்டுபோகையில், வழியில் ஒரு வலுசர்ப்பம் வாசஞ்செய்கிற இடத்தில் நிற்கவேண்டியதாயிற்று. அவ்வலுசர்ப்பம் பார்வைக்குப் பயங்கரமாயும், முதலையின் பற்களையுடையதாயும், நாசியில் அக்கினியின் புகை குபுகுபென்று எழும்ப வாயை ஆ வென்று திறந்துகொண்டும், பாதங்களில் கழுகுகளின் நகங்களையொத்த நகங்களையுடையதாயும், இன்னும் தேகம் புள்ளி புள்ளியாய் பயங்கர தோற்றமுடையதாயுமிருந்துகொண்டு, அவ்வழியே செல்லும் மனிதரை எடுத்து வெடுக்கென்று விழுங்கிக்கொண்டு மிருந்தது. அச்சமயம் அரசகுமாரன் அங்கு சென்றுன். உடனே வலுசர்ப்பம் அவனை விழுங்கும்படி வாயைத் திறந்து பயங்கர சத்தமிட்டுக்கொண்டு அவனை நோக்கி வந்தது. உடனே அரசகுமாரன் பயந்து நடுங்கினுனென்றுலும் தைரியங்கொண்டு தன் கையிலுள்ள ஈட்டியை அதின் தொண்டைக்குள்

நட்டமாய்க் குத்தி நிறுத்திவிட்டு, தான் வெளியே குதித்துவிட்டான். அப்போது வலுசர்ப்பம் வாயை மூடமுடியாமல் பட்ட அவஸ்தை சொல்லமுடியாது. அது எவ்வளவு அதிகமாய் வாயை மூட பிரயாசப் பட்டதோ அவ்வளவுக்கு ஈட்டி பலமாய்க் குத்தி வேதனைப்படுத்தி னது. அந்த வேதனையின் அகோரத்தால் அந்த வலுசர்ப்பம் மாண்டு போனது. அப்போது அங்கே, 'அதின் பற்களைப் பிடுங்கி விதைத் துப்போடு' என்ற ஓர் சத்தம் கேட்டது. உடனே அவன் அப்படியே விதைத்தான். விதைத்தவுடன் அதிலிருந்து அநேக இராட்சதர் எழும்பினார்கள். பின்னும், 'ஒரு கல்லை யெடுத்து அவர்கள் மத்தியில் போடு' என்ற ஓர் சத்தம் உண்டானது. அப்படியே அவன் அவர் கள் மத்தியில் ஒரு கல்லைப்போடவே அவர்களெல்லாரும் ஒருவருக் கொருவர் சண்டைபோட்டு மாண்டார்கள். உடனே அங்கிருந்து ஐந்து வீரர் எழும்பினார்கள். அவர்கள் ஒரு அரமனை கட்டி அதில் அந்த ராஜகுமாரனை வைத்து வாழ்த்தி, தங்களுக்கு அவனை ராஜா வாக்கினார்கள். அவன் அவர்களுக்கு ராஜாவாகி உலகம் முழுவதிற் கும் நன்மை செய்துவந்தானும். இது ஒரு நல்ல கதை. இதின் பொருள் நமக்கு அதிக நன்மையை விளைவிக்காமற் போகாது. ஆகையால் இக்கதையிலுள்ள சில குறிப்பான பதங்களுக்குப் பொருள் பின்வருமாறு:

(1) வலுசர்ப்பம். குடிவெறி என்னும் பேய். இது எத் தனையோ மனுஷரையும், பெண்களையும், வாலிபரையும், பிள்ளை களையும் நாசப்படுத்துகிறது. அதை ஜெயிப்பது மகா கடினம்.

(2) ராஜகுமாரன். மதுவிலக்குக் கூட்டங்களை ஏற்படுத்தி அதிலுள்ள சிறு வீரர்களை உற்சாகப்படுத்தி வரும் மனிதரையும், மதுபானங்களுக்கு விரோதமாய் கதைகளையும் பாட்டுகளையும் போத னைகளையும் எழுதியனுப்பும் சிநேகிதரையும் குறிக்கும். இவர்களுக்கு ஞானம், தைரியம், சன்மார்க்க பெலம், விடாமுயற்சி, வரம் முதலி யவை அதிக அவசியம் வேண்டியது.

(3) பற்கள். கள்ளுக்கடைகளும், சாராயக்கடைகளும், மது ஷாப்புகளும்.

(4) ஐந்து வீரர்கள். குடிவெறியை எதிர்த்து ஜெயிப்பதால் மீதியாகும் பணங்கள், கட்டடங்கள், மனுஷ சத்து, காலங்கள், வரங்கள் என்பவைகளாம்.

உலகத்திலுள்ள எல்லாவகைப் பாவங்களிலும் குடிவெறியென் னும் பாவம் மனுஷருக்கு சரீர தண்டனையையும், ஆத்தும தண்டனை யையும் வருவிக்கக் கூடியதாயிருக்கிறது. இந்தப் பரிதாபத்தைப்

பார்த்து, மதுவின்மேல் வெறுப்புள்ள சிநேகிதர் எல்லோரும் இப் பாவம் உலகத்தில் பரம்பாவண்ணம் பிரயத்தனம் செய்வோமாக. கடவுளும் இதற்கு உதவிசெய்வாராக.

## A SUMMER SCHOOL

## நீலகிரியைச் சேர்ந்த கல்லட்டியில் நடந்த ஸ்திரீகளின் ஞானோதய வித்தியாசாலை

Mrs. Moorhouse அம்மாளும், Miss Ling அம்மாளுமே இப் பள்ளிக்கூடத்தை இவ்விடத்தில் நடத்த ஏற்பாடு செய்தவர்கள். அவர்களைக் கர்த்தர் மென்மேலும் ஆசீர்வதிப்பாராக.

இக்கூட்டம் மார்ச் மாதம் 28-ம் தேதி திங்கள் சாயந்திரம் ஆரம்பித்து, வெள்ளி காலை 9 மணிக்கு முடிவுபெற்றது. கூட்டங்களின் அருமையை முதலில் உணராதவர்கள், பின்னால் உணர்ந்து, அதின் இன்பத்தைத் தங்கள் வாயினால் சாட்சியிட்டதினால் அறிகிறோம். இன்னும் அதிகமாய்ப் படித்து அறிவடையவேண்டுமென்னும் ஆவலுள்ளவர்களுக்கு இப்பள்ளிக்கூடத்தினால் மிகுந்த பிரயோஜனமுண்டு என்று தெளிவாய்ச் சொல்லக்கூடும்.

28-ம் தேதி திங்கள் சாயந்திரம் ஆயத்த ஜெபக்கூட்டம் நடந்தது. 'அருள் ஏராளமாய்ப் பெய்யும்' என்னும் பாடலைப் பாடி ஆரம்பித்தபின், ஒருவர் ஜெபம்பண்ண, 'எலியாவின் தேவன்' என்கிற வார்த்தையின்பேரில் வெகு அருமையாய் Miss Grover அம்மாள் பேசினார்கள். 'இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான்' என்று நாம் நம்மைக்குறித்துச் சொல்லக்கூடுமா?

செவ்வாய் காலை 9 மணிக்கு கூடிவந்திருந்த சுமார் 90 பெண்களையும் 6 வகுப்புகளாய்ப் பிரித்து அப்போஸ்தலர் 1—17 அதிகாரங்களிலிருந்தெடுக்கப்பட்ட (1) விசுவாசம், (2) ஜெபம், (3) பரிசுத்தாவி என்னும் பொருட்களின்மேல் 6 உபாத்திச்சிமார் பாடம் நடத்தினார்கள். ஒவ்வொரு நாட் காலையிலும் வகுப்பு ஆரம்பிக்குமுன் அந்த 6 பேரும் கூடி ஆண்டவருடைய சமுகம் காத்திருந்து பரிசுத்தாவியானவரின் ஏவுதலுக்குத் தங்களை முழுவதுமாய்ப் பிரதிஷ்டை பண்ணிக்கொண்டதும், கூடிவந்திருந்த அநேக தாய்மாரும் தனித்தனியாய் தேவனோடு சம்பாஷித்து வேண்டிய ஆசீர்வாதங்களுக்காக அவரிடம் மன்றாடி வந்ததுமே, இக்கூட்டத்தின் ஜெயத்துக்குக் காரணம் என்று திட்டமாய்ச் சொல்லலாம்.

பகல் 11 மணிக்கு இந்து ஸ்திரீகளுக்கு கடவுள், பாவம், தலைவிதி, மறுஜன்மம், இரட்சிப்பு, வேதம் இவைகளைப்பற்றி எப்படிப் பேசி அவர்களுடைய தப்பிதமான எண்ணங்களை நிராகரிக்க வேண்டுமென்பதைப்பற்றி, 'இந்து ஸ்திரீகளும் கிறிஸ்தவ சுவிசேஷமும்' என்னும் புஸ்தகத்தைக்கொண்டு படிப்பிக்கப்பட்டது. இதில் எல்லாரும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லி தர்க்கிக்க இடங்கிடைத்த விஷயமானது ஆத்தும ஆதாயம் செய்யும் ஆசையை யாவருக்கும் மூட்டிவிட்டது. இதுவும் தெய்வ கிருபையே.

மேலும் 3 மணிக்கு ஒரு கிறிஸ்தவ குடும்பத்தின் தலைவனுக்குத் துணைவியானவள், மனைவியாக, இனத்தாளாக, அயலகத்தாளாக, தாயாக எப்படி மாதிரி காண்பிக்கவேண்டுமென்று ஆலோசனைகள் சொன்னதும் பயனற்றதாய்ப் போகவில்லையென்பது அவர்கள் ஊருக்குப் போகும் வழியில் பேசிக்கொண்டுபோன பேச்சினால் தெரிந்தது.

ஒருநாள் ஒரு ஜெபக்கூட்டம் எப்படி நடத்தப்பட்டதென்றால், ஒவ்வொருவரும் தன் தனக்குத் தேவையான நன்மைகளை ஆண்டவரிடம் கேட்க நேரம் போதாதபடியால், தேவாவியானவரின் ஆலோசனையின்பிரகாரம், அவரவர் தங்கள் விண்ணப்பங்களையும் மன்றாட்டுகளையும் எழுதிக்கொடுத்துவிட, அவைகளை ஜெப வித்தானியா போல் ஒருவர் வாசிக்க, மற்றவர்கள் யாவரும் ஒருமனப்பட்டு முழங்காலில் நின்று, மிகவும் ஊக்கத்தோடு, 'நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே' என்று பதில் சொல்லவும் இருந்தது. இவ்வித பரிந்துமன்றாடும் ஜெபம் மிகுந்த ஆசீர்வாதங்களைக் கொண்டுவருமென்பதற்கு ஐயமில்லை.

அப்பால் சாயந்திரம் 5 மணிக்கு ஒவ்வொருநாளும் ஆவிக்குரிய கூட்டம் 'எலியாவின் செய்தி,' 'எலியாவின் வேலை,' 'எலியாவின் ஆவி' என்னும் மூன்று பொருளின்மேல் மூன்று நாளும் கனம் Grover அம்மாள் நடத்தினார்கள். இவைகளிலிருந்து பேசப்பட்ட பொருள் மிகவும் சிறப்புப் பொருந்தியது. எப்படியெனில்: இருமனம் ஆகாது. எலியாவின் தேவன் தெய்வமானால் அவரைப் பின்பற்றி நன்மைபெறுவது இஷ்டமா? அல்லது பெருமை, தன்னயம், கோபம் முதலிய நம் இருதயத்தில் நாம் விரும்பி வைத்திருக்கும் விக்கிரகங்கள் தெய்வமானால் அந்தப் பாகாலைப் பின்பற்றி அழிந்துபோவது இஷ்டமா என்றும் (1 ராஜா. 18 : 21), எலியா தன் ஊழியத்தில் சோர்ந்துபோன சமயங்களில் கர்த்தர் அவனைப் பெலப்படுத்தினவண்ணம் (ஏசா. 40 : 29) எலியாவின் தேவன் பெலப்படுத்துகிறவர் என்றும் (1 ராஜா. 19 : 1–15), ஆத்தும ஆதாயம் செய்யும் இரட்டிப்

பான ஆவியின் வரம் பெற்ற எலியாவின் ஆவியும் பலமும் உடைய வர்களாய் நாமும் அந்த ரக்ஷண்ய சேனபதிமுன் நடக்கவேண்டு மென்றும் வற்புறுத்திப் பேசப்பட்டது. (லூக். 1 : 17.)

இவைகளால் மனமாறுதல் அடைந்தவர்களின் தொகை அதிகம். மொத்தத்தில் இக்கூட்டங்களின் போதனையைக் கேட்டவர்களில் அநேகர் பெந்தெகோஸ்தே நாளில் இருதயத்தில் குத்தப்பட்டு, நாங்கள் என்ன செய்யவேண்டுமென்று கேட்டு மனமாறுதல் அடைந்தவண்ணம், தங்கள் மனமாறுதலைத் தங்கள் கிரியைகளின் மூலமாய்க் காட்டி, கூட்டத்துக்கு வந்தவர்கள் தாங்களே தெரிந்துகொள்ளும்படி எழுதித் தொங்கவைத்திருந்த சில நல்ல தீர்மானங்களைக் கிறிஸ்துவுக் கென்று செய்ய உறுதிபண்ணிப்போயிருக்கிறார்கள். கர்த்தர்தாமே அவர்களைப் பெலப்படுத்துவாராக.

செவ்வாய், புதன், வியாழன் இம்மூன்று நாட்களிலும் மேற் சொன்ன மணிக் கிரமப்படி கூட்டங்கள் நடத்தேறியபின், கடைசி யாக வெள்ளி காலை 8 மணிக்கு ஒரு ஸ்தோத்திர ஆராதனை வைத்து கூட்டத்தை முடிக்கத் தீர்மானித்திருந்தது. இதற்கிசைவாக யாத். 15 : 1–21 முடிய வாசித்து நமது ஆண்டவரை ஸ்தோத்திரிக்க வேண்டிய வகைகளைப் படித்தோம். அதாவது, வாசிக்கப்பட்ட பாகத்தில், 'நான் கர்த்தரை அறியேன்', 'நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை' என்று கெர்ச்சித்த சிங்கமாகிய பார்வோனுடன் தேவமனிதனாகிய மோசே போராடி தேவபுத்திரரை விடுவித்து பெரிய சமுத்திரத்தையும் கடந்துவந்தபின் தெய்வவல்லமையை உணர்ந்து, மோசே, இஸ்ரவேலர், மிரியாம், மற்ற ஸ்திரீகள் எல்லாரும் ஏக மாய்ச் சேர்ந்து ஜெயப்பாட்டுப் பாடினதுபோல, இங்கே கூடிவந் திருக்கும் நாமும் சுவாமி நமக்குச் செய்திருக்கும் கிருபைகளை உணர்ந்து ஜெயப்பாட்டுப் பாடவேண்டியதவசியம் என்றும், நம்மை முச்சத்துருக்களின் கையினின்றும் விடுவித்து மாம்சத்துக்கும் ஆவிக்குமுரிய போராட்டத்தில் நாம் ஜெயம்பெற்று நம்மில் பெல மாய் ஆண்டுகொண்டிருந்த குதிரைவீரன் போன்ற வெகுநாள் பாவங்கள், பெரும் பாதகங்கள், நிவிர்த்தியாக்கமுடியாது என்று நாம் எண்ணி வைத்திருந்த அவிசுவாசங்கள், சந்தேகங்களை சமுத்திரத் துக்குள் தள்ளி, அவைகளைக் கல்லைப்போல் ஆழ்த்தி, இனித் தேடிப் பார்த்தாலும் கிடையாமற்போகும்படி பாவமன்னிப்புக் கொடுத்து, நாமும் இச்சமயம் அவரை ஸ்தோத்திரிக்கக் கிருபை கொடுத்த ஆண்டவருக்கு நாம் நமது இருதயமாகிய வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணி (யாத். 15 : 2) நமது பிதாக்களின் தேவனை நமது இளவய தின் அதிபதியாக எண்ணி, அவரை உயர்த்தி அவருக்கு ஸ்தோத்திரப்

பாட்டுப் பாடவேண்டுமென்று ஆவியானவரால் போதிக்கப்பட்டது. அதோடு இப்படி இவ்வுலகில் அவரைத் துதிக்கிற அவரால் மீட்கப் பட்ட பிள்ளைகள் வெளி. 15: 3-ல் சொல்லியபடி மறுமையிலும் மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவரின் பாட்டையும் பாடும் சிலாக்கியம் பெறுவோம் என்கிற நிச்சயமும் பெற்று முந்தின நாள் செய்த ஜெப லித்தானியாபோல் யாவரும் தாங்கள் பெற்ற நன்மைகளுக்காக அவரைப் போற்றும்படி ஒரு ஸ்தோத்திர லித்தா னியாவையும் எழுதி, ஒருவர் வாசிக்க, மற்றவர்கள் 'உம்மைத் துதிக் கிறோம்' என்று துதிக்கவே, எல்லாரும் ஏகமாய் எழும்பி நின்று, 'எல்லாருக்கும் மா உன்னத' என்னும் பாடலால் அந்த மேலோக ராஜனை வாழ்த்தி, இவ்விதமாய் ஸ்தோத்திர ஜெபத்துடன் கூட் டத்தை முடித்தோம். இக்கூட்டங்களில் மிகவும் சிரத்தையாய் உதவி புரிந்த தேவதாசர்களை ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக. அவருக்கே எல்லா கனமும் மகிமையும் உண்டாவதாக. 'எங்களுக்கல்ல கர்த் தாவே, எங்களுக்கல்ல . . . உமது நாமத்துக்கே மகிமை வரப் பண்ணும்.'

அங்கிருந்த 4 நாட்களும், கால அட்டவணையின் பிரகாரமே செலவழிக்கப்பட்டன. ஒவ்வொரு நாளிலும் 4 கூட்டங்கள் நடத் தப்பட்டன.

கால அட்டவணை :—

| | | | |
|---|---|---|---|
| காலை | 6. 30—7. 30 | வரை | அமைதியான நேரம். (வேதம் வாசித்தல்.) |
| ,, | 9—10. 30 | ,, | முதல் கூட்டம். (அப்போஸ் தலர் நடபடிகளின் பேரில்.) |
| ,, | 11—12 | ,, | இரண்டாம் கூட்டம். |
| பகல் | 12. 30 | ... | பகல் சாப்பாடு. |
| ,, | 1. 30—2. 30 | வரை | அமைதியான நேரம். |
| மாலை | 3—4 | ,, | மூன்றும் கூட்டம். |
| ,, | 4. 15 | ... | காப்பி. |
| ,, | 4. 30—5. 15 | வரை | உலாவப் போகுதல். |
| ,, | 5. 30—6. 30 | ,, | நான்காம் கூட்டம். |
| ,, | 7. 30—8 | ,, | இராச்சாப்பாடு. |

முதல் கூட்டத்தில் நடந்தவை :—ஆறு வகுப்பாகப் பிரிக்கப்பட்டு தனித்தனியான இடத்தில் நடத்தப்பட்டது. அதில் அப்போஸ்தலர் 1–17 அதிகாரங்களிலும் வரும் விசுவாசம், ஜெபம், பரிசுத்தாவி என்னும் பொருட்களின்மீது ஆராய்ச்சி செய்யப்பட்டது. ஒவ்

வொரு வகுப்பிலுள்ளவர்களும், தாங்களே மேற்கண்டவைகளைப் பற்றி ஆயத்தம் செய்துகொண்டுபோக அந்தந்த வகுப்புகளில் அதைப் பற்றி போதனைகள் செய்யப்பட்டது.

இக்கூட்டங்களில் அநேக நல்ல போதனைகளைப் படித்துக் கொண்டதோடு, வேத ஆராய்ச்சி செய்யும் விதமும் கற்றுக்கொள்ள ஏதுவாக இருந்தது.

இரண்டாவது கூட்டம்:—இதில் கனம் கிரோவர் அம்மாளவர்கள் இயற்றின 'கிறிஸ்து சுவிசேஷமும், இந்து ஸ்திரீகளின் அபிப்பிராயங்களும்' என்னும் சிறு புஸ்தகம் வாசிக்கப்பட்டு, அதன்பேரில் பலருடைய தாற்பரியங்களும் கொண்டுவரப்பட்டது. அநேக சந்தேகங்கள் நிவிர்த்தியாயின; அநேக புது காரியங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இக்கூட்டங்களை கனம் P. கிரோவர் அம்மாளும், கனம் ஆல்பர்ட் அம்மாளும், முறையே மாறி மாறி நடத்தினார்கள்.

அப்புஸ்தகத்தின் சுருக்கமாவது:—

1. கடவுளைக் குறித்த போதனை
2. பாவத்தைக் குறித்த ,,
3. கர்மத்தைக் குறித்த ,,
4. மறுஜென்மத்தைக் குறித்த ,,
5. இரட்சிப்பைக் குறித்த ,,
6. வேதத்தைக் குறித்த ,, என்பவைகளே.

மாலை 3 மணிக்கு நடத்தப்பட்ட மூன்றாவது கூட்டம்:—

இதை கனம் ஆல்பர்ட் அம்மாளவர்களே நடத்தினார்கள். இதில் தாய்மார் அல்லது மனைவிகள் கவனித்து நடக்கவேண்டிய விஷயத்தைப்பற்றிய போதனைகள் செய்யப்பட்டன. அவற்றின் சுருக்கமாவது:—

I. நன்மனையாளின் இலட்சணங்கள்.

(a) அவளுக்கிருக்கவேண்டிய குணம்.
(b) இனத்தாளாக அவளுக்கிருக்கவேண்டியது அல்லது இனத்தாளாக அவள் நடக்கவேண்டிய விதம்.
(c) அயலகத்தாளாக அவள் நடக்கவேண்டிய விதம்.

II. நல்ல தாயாக அவள் செய்யவேண்டிய காரியங்கள்.

தாய் = இராஜாத்தி (ஆள்பவள்).
பிள்ளைகள் = பிரஜைகள் (குடிஜனங்கள்).

தாயின் பொறுப்பு :—

(1) தன்னையே காத்துக்கொள்ளல். (யோ. 17 : 19.)
(2) பிள்ளைகளுக்காக ஜெபிக்க ஏவப்படல்.
(3) பிள்ளைகளுக்காக ஞானபொக்கிஷம் சேர்த்து வைத்தல். (2 கொரி. 12 : 14.)

சேர்த்துவைக்கவேண்டிய ஞானபொக்கிஷங்கள் :—

1. கீழ்ப்படிதல்.
2. மனத்தாழ்மை அல்லது மரியாதை.
3. உண்மைபேசல்.
4. அன்பு. (ஏழைகள்மீது பரிதாபம்.) (மிருகங்களை வதைப்பது தகாதென்று காட்டல்.)
5. தேவபயம்.
6. வேதவாக்கியம் கற்பித்தல்.
7. வேண்டிய அவசியத்தை இயேசுவினிடம் கேட்கப் பழக்குதல்.
8. தீமையான காரியங்களை விட்டுவிடல். (குற்றத்திற்கு சிட்சை.)
9. சிறு பிரசங்கிகளாக்குதல். (தாங்கள் படித்த சிறு வாக்கியங்களை மற்ற பிள்ளைகளுக்கு கற்பிக்கப் பழக்குதல்.)

இவ்விதமான பொக்கிஷங்களை சேர்த்துவைத்தால் பரலோகத்திலும் பொக்கிஷம் உண்டாயிருக்கும்.

மாலை 5–30 மணிக்கு நடத்தப்பட்ட ஆவியின் கூட்டம் :—

இதை கனம் P. கிரோவர் அம்மாளவர்களே நடத்தினார்கள். எலியா தீர்க்கதரிசியின் சரித்திரத்திலிருந்து எடுக்கப்பட்ட பின் வரும் சில பொருட்களின்மீது போதனைகள் செய்யப்பட்டன :

1. எலியாவின் தேவன்.
2. எலியாவின் செய்கை அல்லது வார்த்தை.
3. எலியாவின் ஊழியம்.
4. எலியாவின் ஆவியும் பலமும்.

சொல்லப்பட்ட போதனைகள் அதிக எழுப்புதலாகவும் ஆத்துமாவுக்குப் பிரயோஜனமாகவும் இருந்தது.

புதன்கிழமை சாயந்திரம் 3 மணிக் கூட்டத்திற்குப் பதிலாக கல்லட்டி ஆலயத்தில் ஜெப லித்தானியா வாசிக்கப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்கு அவசியமான விண்ணப்பங்களை, சரீரத்திற்கடுத்ததும் ஆத்துமாவுக்கடுத்ததுமானவைகளை புஸ்தகத்தில் எழுதிவைக்க,

அவைகளை கனம் ஆல்பர்ட் அம்மாளவர்கள் தேவ சமுகத்தில் வாசித்தார்கள். ஒவ்வொரு விண்ணப்பத்தின் முடிவிலும் 'நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே' என்று மறுமொழி சொல்லப்பட்டது.

கர்த்தரிடத்தில் கேட்டு பெற்றுக்கொண்ட நன்மைகளையும், கூட்டத்தில் அடைந்த நன்மைகளையும், இன்னமும் ஆண்டவர் ஒவ்வொருவருக்கும் செய்திருக்கும் இகபர நன்மைகளையும் நினைத்து, அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவதும் அவசியமாகையால் அதற்காக கல்லட்டியை விட்டுப் புறப்படும் நாளாகிய எப்ரல் மாதம் முதல் தேதி வெள்ளிக்கிழமை காலைநேரம் தெரிந்துகொள்ளப்பட்டது. அங்கு வந்திருந்த யாவரும் தாங்கள் ஸ்தோத்திரிக்கவேண்டிய காரியங்களை முன்போல் புஸ்தகத்தில் எழுதிவைத்த ஸ்தோத்திர ஜெபங்களை கனம் ஆல்பர்ட் அம்மாள் தேவசமுகத்தில் வாசிக்க, ஒவ்வொரு முடிவிலும் 'உம்மைத் துதிக்கிறோம்' என்று சொல்லப்பட்டது.

இப்படியாக அந்த கடைசி ஜெபநேரத்தை ஸ்தோத்திரத்துடன் முடிக்கவும், மாதத்தின் முதல் நாளை ஸ்தோத்திரத்துடன் துடங்கவும் கிருபை செய்த ஆண்டவருக்கு சகல மேன்மையும், துதியும், புகழும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக.

## CHRIST FOR ALL

## கிறிஸ்து எல்லாவிதமான மனுஷர்களுக்காகவும் வந்தார்

இராகம், ஆரபி. ஏகதாளம்.

1. உலகமனைத்தையு முருவா யுண்டுசெய்த வும்பரனே
உந்தன்மறை விரித்துரைக்க ஒருவார்த்தை யானோனே
உலகிலுள்ளோர் பவந்தொலைக்கப் பரன்மடியைத் துறந்தோனே
உகந்தயூதக் குலத்தெழுந்து திருவடிவா யுதித்தோனே.

2. பெருஞ்சுடராய்ப் பேதைகட்குப் பெரும்பாதை காட்டிவைத்தாய்
பெரும்வாரிச் சுனையாகி பெருகி இதயமமைந்தாய்
பேரறிவா ளானவர்க்கு பெருங்கலையு மாகிவிட்டாய்
பெரும்பாவம் புரிந்தோர்க்குப் பேழையாகித் துலங்கிநின்றாய்.

3. ஏழையர்க்கு ஏணியாகி யொருசிலுவையில் மரித்தாய்
ஏதுமில்லா வவதிகளை யுன்கரத்தி லெழுதிவைத்தாய்
எவரெவருன் சரணடைகில் என்றென்றுங் காத்தருள்வாய்
என்றுமுன் கண்மணிபோல் ஏற்று வரவணைப்பாய்.

4. ஆடானாய் ஆயனானாய் ஆடுகளைத் தேடலானாய்
ஆதிமனுடனை யுருவா யமைத்த பராபரனானாய்
ஆதம்வினை தீர்ப்பதற்கா யவனுருவா யமைந்துவந்தாய்
ஆசையுட னடிபணிவோர்க் கதிசய துணையுமானாய்.

5. கானகத்தின் ராஜசிங்கம் யூதகுலந் தனிலுதித்தாய்
காப்பதற்குப் பக்தர்தனை பசாசுசிங்கம் தலைசிதைத்தாய்
கரைகடந்துன் கற்பனையை மீறின தோட்டஞ்சென்றாய்
கவலையுற்றுத் துயரடைந்து கடும்வினையை யகலவைத்தாய்.

6. பூங்காவனம் தனில்விளைந்த பொல்லாத பாவத்தாலே
புறம்பாகப் போகலுற்ற மனுடர்களைப் பரந்தனிலே
பாங்காகக் கூட்டிவைக்க எருசலேம் பதியதிலே
புறம்பாகக் குருசதிலே சிறுமையாகத் தியாகமானாய்.

7. பவமதிலே மாண்டவர்க்கு பரிவான மீட்பானாய்
பரிசுத்தம் வேண்டுவோர்க்கு பரிகார ஜெயமானாய்
புவனமதில் பலபாவம் புரிந்தவர்க்காய் பலியானாய்
பற்றிப் பிடித்தவர்க்கு பக்தியாகி மோட்சமானாய்.

8. தாழ்வான புவிக்கிறங்கி தாழ்ந்தோரை மேலேற்றலானாய்
தரித்திர மடைந்தோரை தாங்குதற்கு ஏழையானாய்
திறமாக உயிரோ டெழுந்ததினால் சாவைவென்றாய்
திரும்பவுஞ் ஜெயமாக பரமேறி நீதியானாய்.

9. சத்தானாய் வித்தானாய் சகல சம்பூரணமானாய்
சித்தானாய் சொத்தானாய் சொர்ண மாலையுமானாய்
சித்தமானாய் சீரான முத்திவழி தானானாய்
சித்திரமுஞ் சிலையுமா யென்முன்பு நிற்கலானாய்.

10. விசுவாசந் தனைப்பிடித்து வேண்டிநின்றால் வந்துநிற்பாய்
விளக்கொளியாஞ் சுவிசேஷம் வீசும்வகை காட்டிவைப்பாய்
வேதநாயக னுன்மேல் கவிசாற்ற ஏற்றிவைத்தாய்
விதவிதமா யுன்கருணை விளம்பிடவுன் னருள்தருவாய்.

V. D. Kailasam.

C. L. S. PRESS, MADRAS—1921